**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 252 நாள்: 30.06.2026

**கோடம்பாக்கம் மண்டலத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (30.06.2026) மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-127க்குட்பட்ட சாய் நகர், காளியம்மன் கோயில் தெருவில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, விருகம்பாக்கம் கால்வாயில் தடுப்புச்சுவர் உயர்த்தி கட்டும் பணி, தைஷா 1 மற்றும் 2 ஆகிய பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடைபாதை, பூங்கா, விளையாட்டு மைதானம் மற்றும் திறந்தவெளி இடத்தில் மேம்பாட்டுப் பணி, வார்டு-129க்குட்பட்ட ஆர்காட் சாலையில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் மறுசீரமைப்பு மற்றும் அமைக்கும் பணி, வார்டு-136க்குட்பட்ட பி.டி. ராஜன் சாலையில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணி உள்ளிட்ட பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**